1971 ஜூலை 2]

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, சலவைத் தொழிலாளர்கள் அநேகமாக நகர்ப்புறங்களில் தான் இருக்கிறார்கள். கிராமப் பகுதியில் இருக்கும் மக்கள் அவர்களாகவே துணி துவைத்துக்கொள்கிறார்கள். அந்தவகையில் சுகாதாரக்கேடு வந்திருக்கலாம். எல்லா இடங்களிலும் சலவைத் துறை கட்டுவது சாத்தியமில்லை.

திரு. என். இராஜாங்கம் : தலைவரவர்களே, சில சலவைத் துறைகள் எல்லாம், ஏற்கெனவே கட்டப்பட்டவை. அவைகள் எல்லாம் பாழடைந்து விட்டன என்று உறுப்பினர்கள் சொன்னார்கள், அமைச்சர் அவர்கள் கவனம் கொள்வார்களா என்று கேள்வி கேட்டார்கள். முதலில் கட்டுவதற்கு பாதி மான்யமாகவும், பாதி கடனாகவும் அரசாங்கம் உதவி கொடுத்தது. அப்படி மீண்டும் கொடுத்து சீர்படுத்த இயலுமா என்று கேட்டபோது, அதை கவனிக்கிறேன் என்று அமைச்சர் சொன்னதன் பொருள் என்ன ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, நகராட்சிகளுக்கும், பேரூராட்சிகளுக்கும் சலவைத் துறை கட்டுவதற்காக மான்யமாகவும் கடனாகவும் தந்து இருக்கிறோம். அதை பராமரிக்கும் பொறுப்பு நகராட்சியையும், பேரூராட்சியையும் சார்ந்தது ஆகும். அதை பராமரிப்பது அரசின் கடமையில்லை.

திரு. கே. ரங்கநாதன் : தலைவரவர்களே, கோவை நகரில் டோபி கானா கட்டுவதற்கான உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, கோவை நகரிலிருந்து ஒரு கோரிக்கையும் வரவில்லை.

திரு. சோ. கருணாநாதன் : தலைவரவர்களே, நீலகிரி மாவட்டத்தில் குன்னூரில் டோபிகானா இல்லை. இருப்பது போதிய அளவு இல்லை. இன்னொன்று ஏற்படுத்த அரசு முன்வருமா என்று கேட்கவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கேள்வியிலிருந்தே அங்கே ஒரு சலவைத் துறை இருப்பதாகத் தெரிகிறது. சீர்படுத்தப்படுமானால் அது போதும். அதை சீர்படுத்துகிற ஏற்பாட்டுக்கு அரசு அந்த நகராட்சியோடு கலந்து ஆவன செய்யும்.

சென்னிமலை காட்டு நிலங்கள்

*113 வினா—**திரு. சு. துரைசாமி** : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னிமலை பிர்க்காவில் உள்ள 300 ஏக்கர் காட்டு நிலங்களை விவசாயத்திற்குப் பயன்படுத்தும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) தற்போது இல்லை.

(இ) வினா எழவில்லை.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவரவர்களே, அந்தப் பகுதியில் வாழும் பொதுமக்கள் அந்தக் காட்டு நிலங்கள் நல்ல காடாக இல்லை என்று சொல்லி, விவசாயத்திற்கு அளிக்கவேண்டுமென்று கோரிக்கை ஏதாகிலும் தந்து இருக்கிறார்களா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : அது தான் தற்போது இல்லை என்று சொன்னேன். கோரிக்கை வரவில்லை. வந்தால் பரிசீலிக்கப்படும்.

* 114 வினா.—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சென்னிமலை பிர்க்கா காட்டில் (Forest) 50 ஏக்கர் நிலம் திருப்பூர் கூட்டுறவு பால் பண்ணைக்கு ஏலத்தில் விடப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இல்லை.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 1967-68-ம் ஆண்டில் மேற்படி காட்டிலிருந்து திருப்பூர் கூட்டுறவு பால் சங்கத்திற்கு நிலம் கொடுக்கப் பட்டிருக்கிறதா ? அதற்கான குத்தகை என்ன ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : திருப்பூர் கூட்டுறவு பால் பண்ணைக்கு 27—3—1963-ல் 100 ஏக்கர் நிலம் குத்தகைக்கு விடப்பட்டிருந்தது. இன்னும் வாய்பாடி காட்டில் குமாரசாமி என்பவருக்கு 52 ஏக்கர் விடப்பட்டிருந்தது. அந்தக் குத்தகைகள் 1963-66 வரையில் அவை முடிந்து விட்டன. மறுபடியும் நீடிக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரம் முடிகிறது. இன்னும் ஐந்து நிமிஷம் நீடிக்க அவையின் அனுமதியைக் கோருகிறேன்.

திருப்பூர் நகரை தொட்டுச் செல்லும் புது பஸ் வழித்தடங்கள்

* 115 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பூர் நகரை தொட்டு போகும் முறையில் 6-3-1967-க்கு பின்னர் 23—3—1971 முடிய எத்தனை வழித்தடங்களில் தனியார் பஸ் விடப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : திருப்பூர் நகரைத் தொட்டுப் போகும் முறையில் 6—3—1967-க்குப் பின்னர் 23—3—1971 முடிய இருபது உரிமங்கள் தனியார் பேருந்து உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.